[2010 ஏப்ரல் 30

(இ) உதகமண்டலம், சில இடங்களில் குடிநீர், மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டதால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன்.*

திரு. போ. கோபாலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உதகையில் ஏறக்குறைய ஒரு வார காலமாகக் குடிநீர் இணைப்பு துண்டிப்பு, மின் இணைப்பு துண்டிப்பு என்று சொல்லி, ஏறக்குறைய நேற்று வரை 750 வீடுகளுக்கும், விடுதிகளுக்கும் இணைப்புகளைத் துண்டித்திருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மாண்புமிகு முதல்வரிடமும், துணை முதல்வரிடமும், சட்டத் துறை அமைச்சரிடமும் எடுத்துச் சொல்லி, நாங்கள் அவகாசம் வாங்கியிருக்கிறோம். ஆனால் அவர்கள் இப்பொழுது ஏறக்குறைய 2,650 வீடுகளில் இணைப்புகளைத் துண்டிக்க இருக்கிறார்கள். 5 ஆண்டுகளாக, 10 ஆண்டுகளாக சொந்த பட்டா நிலத்திலே வீடு கட்டி வாழக்கூடிய மக்கள் அவர்கள். தவறு, அரசாங்க அதிகாரிகள் செய்தார்களோ, மக்கள் செய்தார்களோ, அண்ணாவினுடைய 'மறப்போம், மன்னிப்போம்' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கக்கூடிய நம்முடைய அரசாங்கம் தயவுசெய்து அந்த மக்கள் செய்த தவறுகளை மன்னித்து, ஒழுங்குபடுத்தும் ஆணையத்தினை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி, சென்னையிலே மக்களைக் காப்பாற்றியதுபோல, ஊட்டி மக்களை தயவுசெய்து அந்தத் துன்பத்திலிருந்து காப்பாற்றியாக வேண்டும். அறியாமல் செய்தவர்களை மன்னித்துக்கொள்ளுங்கள். அவர்கள் சார்பாக நான் கையெடுத்துக் கும்பிட்டு, மன்னிப்புக் கேட்கிறேன். காலில் விழச் சொன்னால்கூட நான் வருவதற்கு நேரமாகும். எனவே தயவுசெய்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.*

2010 ஏப்ரல் 30]

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கவனத்தைக் கவர்ந்திருக்கக்கூடிய சாத்தூர் அருகே நடைபெற்றிருக்கக்கூடிய தலைமைக் காவலருடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும், நிறைய உறுப்பினர்களும் இதுசம்பந்தமாக அறிவிப்பு கொடுத்துள்ளீர்கள். அவை என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. அவற்றைப் பின்னால் பார்க்கலாம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

வால்பாறை, தோனிமுடி எஸ்டேட்டில் சிறுத்தைப் புலி தாக்கி சிறுவன் இறந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *28–4–2010 அன்று வால்பாறையில் மணிசங்கர் என்கிற சிறுவனை சிறுத்தைப் புலி தாக்கியதில், அவன் இறந்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. கோவை தங்கம் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் யாரேனும் ஒருவர் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.*

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வால்பாறையில் சத்தியராஜ், முத்து, திருமதி தேவகி, ரம்யா, காயத்ரி, கௌசல்யா, முகேஸ்வரன், மணிசங்கர் ஆகிய 8 பேரை சிறுத்தைப் புலி அடித்துக் கொன்றிருக்கிறது. அங்கே தோனிமுடி என்கிற இடத்தில் கடந்த 4 மாதங்களில் 2 குழந்தைகளை அடித்துக் கொன்றுவிட்டது. 1–1–2010–இலே இதே இடத்திலே ஒரு குழந்தையை அடித்து, நான் இந்தப் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களிடத்திலேகூட, கூண்டுகளை நிறைய வைக்க வேண்டுமென்று சொன்னேன். ஏற்பாடுகள் செய்யலாமென்று அறிவித்தார்கள். இப்போது அந்த தோனிமுடி என்ற இடத்திலே